DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 227/2021**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge , Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | **அடைக்கம்மாள்** | Caste | : | |
| Husband Name | : | **ஆண்டிசாமி** | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **08.07.2025.**

**PW - 2**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம் மருங்காபுரி அருகில் உள்ள பீரங்கிமேடு என்ற ஊரில் வசித்து வருகிறேன். எனது சொந்த ஊர் பிடாரிபட்டி. நான் விவசாய வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எதிரி எனது அக்கா மகன். இந்த வழக்கில் இறந்துபோனது எனது மகன் பழனிசாமி. என் மகன் லாரி டிரைவராக வேலை செய்தார். என் அக்கா பெயர் நாச்சம்மாள். அவர் கம்பளியாம்பட்டியில் வசிக்கிறார். டிரைவர் வேலைக்கு செல்லாமல் என் மகனை எனது அக்கா அவர் வீட்டில் வேலைக்கு வைத்திருந்தார். எதிரிக்கும், என் மகனுக்கும் என்ன பிரச்சனை என்றால் எதிரி என் மகனை அவரது மனைவியுடன் இணைத்து சந்தேகப்பட்டார். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் மாலை 05.00 மணியளவில் எதிரி அருவாளால் என் மகனை தலையில் பின்புறம் வெட்டிவிட்டார். இடது கையில் வெட்டிவிட்டார். எதிரி மூன்று வெட்டு வெட்டினார். அந்த சமயத்தில் நான், என் கணவர், என் அண்ணன் மகன்

பாலமுருகன் ஆகியோர் அந்த இடத்தில் இருந்தோம். அந்த பீரங்கிமேட்டில் எங்கள் வீட்டு அருகே உள்ளது. அந்த அருவாளை பார்த்தால் தெரியும். என்னிடம் காட்டப்படும் அதசாபொ.1 அருவாள்தான் அதுவாகும். அதன்பிறகு என் மகனை துவரங்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் அழைத்து சென்றோம். அங்கு பார்க்கமுடியாது என்று சொல்லி திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். அங்கு இரவு 09.00 மணிக்கு என் மகன் இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

பீரங்கிமேட்டில் ரோட்டிற்கு இடதுபுறம்தான் எங்கள் வீடு, தோட்டம் உள்ளது என்றால் சரிதான். ரோட்டிற்கு வலதுபுறம் எங்களுக்கு விவசாயம் மற்றும் வேறு வேலை இல்லை என்றால் சரிதான். பழைய வீடு மற்றும் கொழுந்தனார் வீடு பூட்டியும், இடிந்தும் கிடந்தது என்றால் சரிதான். நான் சம்பவத்தன்று பாலாறுபட்டிக்கு வேலைக்கு சென்றேன். எங்கள் வீடு பீரங்கிமேட்டிலிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. பாலாறுபட்டி நாங்கள் குடியிருக்கும் வீட்டிலிருந்து 2 கிலோமீட்டர் தூரம் கிழக்குபுறமாக தள்ளியுள்ளது. நான் பாலாறுபட்டியில் வேலை முடித்துவிட்டு நான் குடியிருக்கும் வீட்டிற்கு வந்தபோது என் மகன் வெட்டுப்பட்டுகிடப்பதாக சொன்னதன்பேரில் அங்கு போனேன் என்றால் சரிதான். என் மகனை நான்தான் தூக்கி ஆம்புலன்சில் வைத்தேன். அப்போது என் புடவையில் இரத்தமானது. அதை போலிசாரிடம் காட்டினேன். யார். யார் என் மகனுடன் ஆம்புலன்சில் சென்றார்கள் என்றால் நான், எனது கணவர் மற்றும் எனது தங்கை ஆகியோர் சென்றோம். காவல்நிலையத்தில் என்னை இருக்க வைத்துவிட்டு போலிசார் சென்று இடத்தைப் பார்க்க போனார்கள். ஆம்புலன்சில் இருந்த என் மகனை எங்கே கூட்டிபோனார்கள் என்று எனக்கு தெரியாது. எதிரியின் மனைவி பாண்டிச்சேரியிலும் இருப்பார், என் அக்கா நாச்சம்மாள் ஊருக்கும் வருவார். என் மகன் எங்கள் ஊரில் பெண் பிள்ளைகளிடம் பிரச்சனை செய்வதாக ஊருக்குள்

பிரச்சனையாக இருந்ததா என்றால் இல்லை. என் மகனை சம்பவத்தன்று வேறு யாரோ வெட்டிவிட்டார்கள் என்றால் சரியல்ல. என் மகன் இறந்த துக்கத்தில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.